**அ.வ.எண். 167/2023**
**வா.சா.3 : தங்கராஜ்**
**தேதி : 07.04.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வாதி அழைத்ததன் பேரில் இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். திருப்பதி செட்டியார், வெங்கட்டாயியம்மாள், சுப்பிரமணியம் செட்டியார், பாப்பாயியம்மாள் ஆகியோர் கடந்த 04.12.1940 ஆம் தேதியன்று ஒரு பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்று சொன்னால் பாகம் செய்து கொண்டது முழுமையாக தெரியாது நான் அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில்தான் வாதியின் பங்காளியான திருப்பதி செட்டியார் வகையறாவிடமிருந்து சொத்து வாங்கியுள்ளேன். வா.சா.ஆ.7 ஆவணத்தில் 1, 2, 3, 4 இலக்கமிட்டவர்கள் பெயரில் கிரையம் ஏற்பட்டும் என்று கண்டுள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதியின் தந்தைவழி தாத்தா சுப்பிரமணியம் செட்டியாருக்கு தனிப்பட்ட முறையிலும் கிரையப்பாத்தியப்பட்ட முறையிலும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. சுப்பிரமணியம் செட்டியாரின் 4 மகன்களில் ஒருவர்தான் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் என்று சொன்னால் சரிதான். சுப்பிரமணியம் செட்டியாரின் மகன்கள் 4 பேரும் சொத்தினை பாகம் பிரித்துக்கொண்டு அதில் ஒரு பாகம் வாதி பிரதிவாதிகளுக்கு வந்தது என்று சொன்னால் சரிதான். ஆகவே தாவா சொத்து தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. நீங்கள்

பிரமாண வாக்குமூலத்தில் பூர்வீக சொத்து என்று தவறாகு குறிப்பிட்டள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி பிரதிவாதிகளின் தகப்பனார் தியாகராஜன் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை இவ்வழக்கு வாதியை தவிர மற்றவர்களுக்கு தனித்தனியாக 11.11.2020 ஆம் தேதியன்று 4 தனித்தனி செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியின் சகோதரியும் தாயுரும் 18.12.2020 ஆம் தேதியன்று தங்களுக்கு செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்ட சொத்தை 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா சொத்துக்கள் செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி தற்சமயம் 3ம் பிரதிவாதி சரவணனுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி அவருடைய தகப்பனார் மற்றும் 1ம் பிரதிவாதியின் அனுமதியின் பேரில்தான் தாவா சொத்தின் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியில் குடியிருந்து வருவதிலிருந்து வாதியை வெளியேற்ற 3ம் பிரதிவாதி நடவடிக்கை எடுத்ததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.07 17:08:09 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.